பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை





# இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்


யோவா. 17:3

மாத இதழ்

இதழ்: 10

பிப்ரவரி 2014

மலர் 14



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர, சகோதரிகளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையால் 2014–ம் வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்ததற்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம். கடந்த மாதம் முழுவதும் நம்மை காத்து வழிநடத்தியதற்காகவும், கடந்த மாதத்தில் சபையின் ஆராதனைகள், ஊழியங்கள் எல்லாவற்றிலும் தேவ ஆசீர்வாதம் இருந்தபடியினாலும் தேவனை ஸ்தோத்தரிப்போம்.

இந்த மாதம் சபையின் மூலம் நடக்கும் ஆராதனைகள், ஊழியங்களுக்காகவும் விசேஷித்த நிகழ்ச்சிகளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளும்படி அன்பாய் கேட்டுக் கொள்கிறேன். **“சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்”** (யோவா. 8:32). திரித்துவத்தின் 2–வது ஆள்துவத்தை (இயேசுவை) அறிவதும் சத்தியம் தான். இந்த ஆண்டவர் இயேசுவை அறிந்தால் கீழ்க்காணும் ஆசீர்வாதங்கள் நமக்கு உண்டாகும்.

**1. கிருபையும் சமாதானமும் பெருகும் (2பேது. 1:2):–** இயேசுவை அறிந்தால் அவரை போல் மன தாழ்மை நமக்கு உண்டாகும். ஏனென்றால் “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்” (மத். 11:29). என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என்று இயேசு கூறுகிறார். அப்படி கற்றுக் கொள்ளும்போது ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் (விடுதலை) கிடைக்கும் என்று ஆண்டவர் இயேசு நம்மை உற்சாகப்படுத்துகிறார். மனத்தாழ்மை நம்மை பிசாசு கட்டி வைத்திருக்கும் பெருமை என்ற கட்டிலிருந்து நமக்கு விடுதலை தருகிறது. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததினால் மாத்திரம் இயேசுவை அறிந்து கொண்டேன் என்று சொல்ல முடியாது. அவரிடத்தில் உள்ள குணங்களை கற்பது மாத்திரமல்ல, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்போது நமக்கு கிருபையும் சமாதானமும் பெருகும்.

**2. ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் தேவையான வல்லமை கிடைக்கும் (2பேது. 1:3):–** இயேசுவை அறிந்து அவரிடத்தில் கற்றுக் கொண்டு அவருடைய உபதேசத்திற்கு கீழ்ப்படியும் போது இந்த உலகத்தில் வாழ வேண்டிய ஜீவனுக்கும் மற்றும் தேவ பக்தியாய் நடக்க தேவையான வல்லமையை (பரிசுத்த ஆவியானவரின் வல்லமை) நமக்கு தருகிறார்.

**3. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்கு தப்புவது (2பேது. 1:4):–** பிசாசு எவனை விழுங்கலாம் என்று சுற்றித் திரிகிறான். பரி. ஆவி நிரப்புதல், ஏவுதல் இல்லாவிட்டால் கேடு என்ன என்று நமக்கு தெரியாது. பரி. ஆவியானவர் வல்லமை கேட்டில் விழாதபடி நம்மை தப்புவிக்கிறது. பரி. ஆவியானவருக்கு நாம் கீழ்ப்படியும் போது இந்த ஜெயத்தை நமக்கு தருகிறார். இதை இயேசுவை அறியும் போது அவரிடத்தில் கற்றுக் கொள்ள முடியும். இயேசு பிசாசின் தந்திரங்களை ஜெயித்தார். அதை போல நாமும் ஜெயம் பெற்றவர்களாயிருக்க விரும்புகிறார்.

நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை. –எரே. 39:17

**4. திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாயிருப்போம் (2பேது. 1:4):–** இயேசுவை அறியும் போது ஏதேன் தோட்டத்தில் இழந்த திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாய் மாறுவோம். இயேசு அப்படிப்பட்ட திவ்விய சுபாவம் உள்ளவராயிருந்தார். இயேசுவை அறிய அறிய அவருடைய சுபாவம் நமக்குள் நிறைய ஆரம்பிக்கும். இது ஒருநாளில் நடக்கிற காரியமல்ல: அனுதினமும் அவருடைய சுபாவத்தை நோக்கி நம்முடைய கிறிஸ்தவ ஓட்டம் இருக்க வேண்டும். ஏனென்றால் நம்மை அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு நம்மை முன் குறித்திருக்கிறார் (ரோம. 8:29). இதற்காகவே நம்மை தெரிந்து கொண்டார்.

பிரியமானவர்களே! இயேசுவை அறிகிறதினால் வருகிற ஆசீர்வாதங்களை சுதந்தரித்து விடுதலையோடு வாழ தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கிருபை செய்வாராக. ஆமென்.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

---

# புகலிடம்




கொந்தளிக்கும் கடல்போல் பிரச்சனைகள் தலைதூக்க
தத்தளிக்கும் பாய்மராய் பாழும்மனம் தள்ளாட
புயலுக்கு புகலிடமாய் ஏழைக்கு பெலனாய்
பரமன் இயேசு வந்திடுவார் தடையாவும் அகற்றிடுவார்
தனிமரமாய் நிற்கின்றேனே உதவயாரும் எனக்கில்லையே
தாங்கொணா பாரங்களை தனியாகவே சுமக்கின்றேனே
என்றே கலங்கி தவித்திடாதே! நொந்து கண்ணீர் சிந்திடாதே
யேசுநாதர் வந்திடுவார் உன் பாரங்கள் சுமந்திடுவார்
உனக்காக பரமதேவன் மனுவுருவில் இறங்கி வந்தார்
இன்னுயிரை ஈந்து மெய்சமாதானம் உனக்கு தந்தார்
வல்லவராய் இன்றும் உன்னோடு பேசுகிறார் –மன
பாரங்கள் நீக்கிடுவார் இளைப்பாறுதல் தந்திடுவார்
வெயிலுக்கு நிழலாய் பெரு வெள்ளத்துக்கு தப்பும் அடைக்கலமாய்
எளியவனுக்கு திடன் தந்து நடைகளை உறுதிப்படுத்தி
இளைப்பாறுதலை தந்திடுவார் ஆறுதல் படுத்திடுவார்
அரணாய் கோட்டையாய் கேடகமாய் என்றும் நம்மோடிருப்பார்.

**– ஸ்டாலின்**

---

# போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் _ போன்: 97224276

இப்போதும்; இதோ; உன் கைகளிலிடப்பட்ட விலங்குகளை இன்று நீக்கிப்போட்டேன்: _எரே. 40:4

**"இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவா. 17:3)**

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். நம் அனைவருக்கும் நித்தியஜீவனை அளிக்கும்படியாக இவ்வுலகத்தில் தம்முடைய ஒரே குமாரனான இயேசுவை பிதா அனுப்பினார். அதைத்தான் யோவா. 3:16–ல் **"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"** அல்லேலூயா. இயேசு கிறிஸ்துவை எப்படி அறிந்து கொள்வதென்று வேதமே விளக்குகிறது.

**1.விசுவாசம்:–** யோவா. 6:47–ல் இயேசு சொல்கிறார், "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே சொல்கிறேன்". யோவா. 6:40–ல் "குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நித்தியஜீவன் அடைவதும் நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது". இயேசுவினுடைய வசனத்தைக் கேட்டு அவரை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவனுண்டு (யோவா. 35:24) என்றும் பார்க்கிறோம். ஆகவே இயேசுவை மட்டுமே முழுமையாக நம்பி அவரையே விசுவாசிக்கும்போது நாம் நித்தியஜீவனை பெற்றுக் கொள்ளலாம்.

**2. நற்கிரியை:–** நாம் நன்மை செய்வதும் ராஜரிக பிரமாணத்தை நிறைவேற்றுவதாக யாக். 2:8–ல் வாசிக்கிறபடி நற்கிரியைகளைச் செய்பவர்களுக்கும் நித்தியஜீவன் உண்டு. ஒருவன் இரக்கத்தின் உந்துதலால் ஏழை எளியவர்களுக்கு செய்யும் உதவியும் தேவன் கணக்கில் வைக்கிறார். யாக். 2:13–ல் **"நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டப்படும்"** என்றும் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும், கனத்தையும்,அழியாமையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார் (ரோம. 2:7) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் (எபி. 13:16), ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்றும் வாசிக்கிறோம். "மிகவும் சிறியவரான இவர்களில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" (மத். 25:34, 40) என்றும் இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

**3. பரிசுத்தம்:–** "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" (மத். 5:8). "நம்மை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்கள் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்" (1பேது. 1:15), **"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை"** (எபி. 12:14) என்றும் வாசிக்கிறபடியால் ஆண்டவரை நாம் தைரியமாய் முகமுகமாய் தரிசிக்க பரிசுத்தம் மிக அவசியமாய் காணப்படுகிறது. அதைத்தான் "நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" என்று (வெளி. 22:11) கூறப்பட்டிருக்கிறது "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (எபி. 10:10)

**4. உண்மை:–** நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளி. 2:10), "கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய் அநேகத்தின்மேல்

நீங்கள் இந்தத் தேசத்திலே தரித்திருந்தால்; நான் உங்களைக் கட்டுவேன்; உங்களை இடிக்கமாட்டேன்: எரே. 42:10

உன்னை அதிகாரியாய் வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி (மத். 5:21,23). மேலும் அனனியா, சப்பீராள் பொய் சொல்லி அழிந்துபோனார்கள் என்பதைப் பற்றியும் அறிந்திருக்கிறோம். பிசாசின் பொய் வார்த்தையினால் ஆதாம் ஏமாந்துபோனான், ஆனால் இயேசுவோ பிசாசை துரத்துகிறார்: அப்பாலே போ சாத்தானே என்று. தேவனுக்கு பிடிக்காத ஒன்று பொய். மோசேயை என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்று சாட்சி கொடுக்கிறார்.

**5. பயம்:–** "ஆத்துமாவை கொல்லுகிறவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆனால் ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்குப் பயப்படுங்கள்" (மத். 10:28). அதனால் எதைக்குறித்தும் யாரைக்குறித்தும் பயப்பட வேண்டியதில்லை. ஆண்டவருக்கு மட்டுமே பயப்படுவோம். "பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ: அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரியதாயிருக்கிறது" (சங். 103:11). **"கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்"** (சங். 103:13).

**6. பொருளாசை (இச்சையடக்கம்):–** "பொருளாசைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல". இயேசுவினிடத்தில் வந்த ஒரு ஐசுவரிய வாலிபன் நித்திய ஜீவனை அடைவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்க, அதற்கு இயேசு தந்த பதிலால் துக்கமடைந்து போனான் என்பதை மத். 19–ம் அதிகாரத்தில் பார்க்கமுடிகிறது. தன்னுடைய சீஷர்களிடத்தில் பேசும்போது ஐசுவரியவான் தேவனுடய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிது என்று கூறினார். அதைத்தான் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிரூபத்தில் குறிப்பிடுகிறார். "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு: ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது, எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு: ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது (1கொரி. 6:12), (1கொரி. 10:23).

**7. உபத்திரவம் (சோதனை):–** "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்: அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" 1பேது. 4:12,13–ல் "உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" என்றும் யோவா. 16:33–ல் "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" என்றும் சொல்லியிருக்கிறபடியால் நாமும் உலகத்தை ஜெயிக்க வேண்டுமென்றால் உபத்திரவத்தை கண்டு கலங்கத் தேவையில்லை. சங். 119:71–ல் "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது: அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்" என்று பாடுகிறான். யோபு தன்னுடைய உபத்திரவத்தில் ஆண்டவரை முழுமையாக நம்பினான். எனவே **"அவரோடுகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்"** (1தீமோ. 2:12) என பவுல் கூறினார்.

**8. தாழ்மை:–** "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக். 4:10). தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். **"தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்"** (லூக். 14:11). இயேசு கிறிஸ்து "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார் (சங். 138:6) என்றும் மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதி. 18:12), தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம் (நீதி. 22:4) என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். சகலத்தையும் உண்டாக்கினவர் தன் சீஷர்களின் கால்களை கழுவி நமக்கு முன் மாதிரியைக் காண்பித்திருக்கிறார்.

**9. கனி:–** "நல்ல கனிகொடாத மரமெல்லாம் அக்கினியிலே போடப்படும்" (மத். 3:10) என்று யோவான்ஸ்நானன் சொல்லியிருக்கிறான். நாம் ஆண்டவருடைய வார்த்தையில் நிலைத்திருக்கும்போது கனி தரமுடியும் என்பதை யோவா. 15:5–ல் "நானே திராட்சைசெடி நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" என்று இயேசு சொல்லியிருப்பதுமில்லாமல் பிதாவானவர் நாம் அதிக கனிகளைத் தரும்போது மகிமைப்படுவார். அதுமட்டுமல்ல இயேசுவுக்கும் சீஷராயிருப்போம் என்று சொல்லியிருக்கிறார். அல்லேலூயா! "ஆவியின் கனி சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும்"(எபே. 5:9).

**10. அன்பு:–** "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும், உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக" என்று இயேசு நியாயசாஸ்திரியினிடத்தில் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டபோது சொன்னார். 1யோவா. 3:11–ல் நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூர வேண்டும். நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். ஆமென்.

**இயேசு, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"** (யோவா.14:6). அந்த வார்த்தையின்படியே இயேசுவை அறிந்தால் மட்டுமே நாம் பிதாவிடத்தில் சென்று, நித்தியஜீவனையும் பெற்றுக் கொள்ள முடியும். தேவனுக்கே மகிமையுண்டாவதாக. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**



## துளசி இலை

**குவைத் பாட்டி**

**துளசி இலைகள் போடப்பட்ட நீரை தினமும் குடித்து வந்தால் தொண்டைப் புண் ஏற்படாது. சருமத்தில் உள்ள சிறு தழும்புகளைப் போக்க, குளிக்கும் நீரில் துளசி இலைகளைப் போட்டு குளிக்கவும் விரைவில் தழும்புகள் மறையும்.**

**– அஹமதி தமிழ் திருச்சபை**

# இல்லை! இல்லை!!

**"நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள்: ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்"** (2இராஜா. 4:2). அருமையான தேவனுடைய பிள்ளைகளே! ஒரு தீர்க்கதரிசியின் மனைவிக்கும் எலிசா தீர்க்கதரிக்கும் நடந்த உரையாடல்தான் மேற்கண்ட வசனம். எலிசா அந்த பெண்ணிடம் வீட்டில் என்ன இருக்கிறது! என்று கேட்ட பொழுது ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் வேறொன்றும் **"இல்லை"** என்றாள். இங்கே தீர்க்கதரிசியின் மனைவி அவிசுவாசமான வார்த்தையை (பதில்) கூறுகிறாள். நம்மில் அநேகர் இன்றளவும் இப்படியே **"இல்லை"** என்ற வார்த்தையை உபயோகித்துக் கொண்டே இருக்கிறோம். தொடர்ந்து எலிசா அந்த பெண்ணிடம் பக்கத்து வீட்டாரிடம் அநேகம் வெறும் பாத்திரங்களை வாங்கி அவைகளில் நிறைய எண்ணெய் வார்த்து, பின் அதை விற்று உன் கடன்களை தீர்த்து நீயும் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றார். எலிசாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததால் காலியான பாத்திரங்கள் முழுவதும் எண்ணெயால் நிரம்பிற்று.

1இராஜா. 17–ம் அதிகாரத்தில் எலியா சாறிபாத் விதவையை நோக்கி கொஞ்சம் அப்பம் கொண்டுவா என்றபோது, பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் **"இல்லை"** என்றே பதில் சொன்னாள். ஆனால் எலியா என்ற தீர்க்கதரிசியின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து முதல் அடையை கொடுத்தபோது பானையில் மாவு செலவழிந்து போகவும் இல்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை.

மத். 14:16–20 –ல் இயேசு சீஷர்களை நோக்கி, நீங்களே அவர்களுக்கு போஜனம் கொடுங்கள் என்றார். எங்களிடம் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல் வேறொன்றும் **"இல்லை"** என்றனர் சீஷர்கள். அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று இயேசு சொன்னார். இயேசுவிடம் கொடுத்த போது மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.

மத். 17–ம் அதிகாரத்தில் அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று சொன்ன போது, இயேசுவிடம் சென்ற இளைஞன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றான். சீஷர்கள் எங்களால் ஏன் முடியாமல் போயிற்று? என்று இயேசுவிடம் கேட்ட பொழுது, **"உங்கள் அவிசுவாசத்தினாலேதான்"** (மத். 17:20) என்றார்.

மேற்கண்ட வசனங்கள் மூலம் தேவன் நமக்கு கூறும் போதனை என்னவென்றால்... உன்னிடத்தில் என்ன இருக்கிறதோ அதை முதலில் இயேசுவின் பாதத்தில் கொடு: அப்பொழுது நம்மிடம் இல்லாததையும் இயேசு நிறைவாக்குவார். **"நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்"** (1கொரி. 13:10). மேலும் அவிசுவாசத்தை விட்டுவிட்டு, விசுவாசத்தில் பெலப்படுங்கள். **"இல்லை"** என்கிற அவிசுவாச வார்த்தையை விட்டுவிட்டு இருக்கிறவராகவே இருக்கிற இயேசுவை முன்வைத்து செயல்படுங்கள்: நிறைவான ஆசீர்வாதங்களை பெறுவீர்கள். (எங்களை அன்பாய் விசாரித்து உபசரித்த குடும்பங்களுக்கும், அஹமதி தமிழ் சபையினர் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துதலும், நன்றியும் இதனால் தெரியப்படுத்துகிறேன்.)

D. **அற்புதராஜ்** (Sis. டெய்சி எபெநேசரின் தகப்பனார்)
**ஸ்தாபகர்: கிருபையின் ஜெபவீடு**
**தாமரைப்பாக்கம் - வேலூர்**

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பாழாக்கப்பட்டான்: _எரே.46:17

# QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. Who is mother of Jesus?
2. John was preaching a baptism of _________
3. Why did Jesus become angry and was grieved?
4. For whom there is no forgiveness? Who committed such crime? How?
5. How many parables were told by Jesus in these five chapters? What are they (titles only)?
6. How many times "twelve" is repeated in these five chapters? Where?
7. What are seeds, birds of air, scorched by sun, thorns and good ground compared to in the parable?
8. How many specific miracles were done by Jesus in these five chapters? What are they (titles only)?
9. Why did Jesus rise in the morning long before day light? Where did He go?
10. Why did the Pharisees plot to destroy Jesus?

**Note:- ANSWERS can be taken from Mark 1 to 5. Submit your answers to the Sunday School Teachers on or before 21.02.2014.**

---

## ANSWER FOR THE QUIZ (JANUARY)

| | | |
|---|---|---|
| 1. | FIRST BORN | Rev. 1:5 |
| 2. | REDEEMED | Rev. 5:9 |
| 3. | WATCHFUL | Rev. 3:2 |
| 4. | PATIENCE | Rev. 2:19 |
| 5. | HEAVEN | Rev. 4:1 |
| 6. | TESTIMONY | Rev. 1:9 |
| 7. | WORSHIP | Rev. 4:10 |
| 8. | BLESSING | Rev. 5:12 |
| 9. | FAITHFUL | Rev. 3:14 |
| 10. | MORNING STAR | Rev. 2:28 |

திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி; நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்: -எரே. 49:11

# உபதேசம்



**"முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்"** (மத். 10:22). முயல் வேகமாய் ஓட்டத்தைத் தொடங்கியது. ஆமை மெதுவாக நகர்ந்தது. வேகமாய் ஓடுகிறோம் என்ற அகங்காரம் முயலை தூங்க வைத்துவிட்டது. ஆமையோ நிதானமாய் நடந்து ஓட்டப் பந்தயத்தை ஜெயித்துவிட்டது. விசுவாச வாழ்க்கையை துவக்கிய நாம் முடிவுவரை அதில் நிலைத்திருக்க வேண்டும். யோவா. 8:31–ல் இயேசு விசுவாசிகளைப் பார்த்து, **"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும்"**. அப்பொழுது மூன்று விதமான ஆசீர்வாதங்கள் உங்களுக்குக் கிடைக்கும் என்று வேத வசனத்தின் ஊடாய் சொல்கின்றார்.

**1. முதலாவது ஆசீர்வாதம்:–** "மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" (யோவா. 8:31). சீஷன் என்றால் குரு சொல்வதை முற்றிலும் நம்பி கீழ்ப்படிந்து நடப்பவன். அவன் குருவுக்கு பிரியமாய் நடப்பவன். எதை செய்தாலும் குரு சொல்வதைக் கேட்டு அதன்படி செய்பவன். நாம் பரிசுத்த ஆவியின்படி நடக்கும் போது, ஆவியின் கனிகள் நம்மில் காணப்படும் (கலா. 5:22,23). அப்பொழுது தேவனுடைய நாமம் மகிமைப்படும். நாம் இயேசுவுக்கு சீஷராயிருப்போம் (யோவா. 15:8). இது எப்பொழுது சாத்தியமாகுமென்று கண்டால் நாம் அவரில் நிலைத்திருக்கும் போது மாத்திரமே. ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் (யோவா. 15:5).

**2. இரண்டாவது ஆசீர்வாதம்:–** "சத்தியத்தையும் அறிவீர்கள்" (யோவா. 8:32). சீஷன் குருவிடமிருந்து அநேக காரியங்களை கற்றுக் கொள்வான். நாம் இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் சத்தியத்தை அறிய முடியும். சத்தியமாவது என்ன என்று பிலாத்து இயேசுவிடம் கேட்டான் (யோவா. 18:38). உம்முடைய வேதம் சத்தியம் (சங். 11:142). உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம் (சங். 119:160). உம்முடைய வசனமே சத்தியம் (யோவா. 17:17). **"இயேசு: நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்"** (யோவா.14:6) என்றார். சத்தியத்தை அறிவது என்பது மேலோட்டமாய் அறிந்து கொள்வது அல்ல. முழுமையாய் அதன்படி நடப்பது ஆகும். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்: அவனுக்குள் சத்தியமில்லை (1யோவா. 2:4).

**3. மூன்றாவது ஆசீர்வாதம்:–** "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா.8:32). இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் நமக்கு விடுதலை கிடைக்கும். எவைகளிலிருந்து விடுதலை என்றால்! பாவத்திலிருந்து விடுதலை. "பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோம. 6:18). நியாயப்பிரமாணத்தினால் வரும் சாபத்திலிருந்து விடுதலை. **"நம்மை கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்"** (ரோம. 7:6). ஆண்டவராகிய இயேசு அவருடைய இரத்தத்தினாலே அந்த விடுதலையை நமக்குக் கொடுத்திருக்கிறார். எகிப்திலே இஸ்ரவேலருடைய வீடுகளிலே இரத்தம் அடையாளமாக தெளிக்கப்பட்டது. அவர்கள் மேல் வாதை வரவில்லை. அவர்களுக்கு விடுதலை கிடைத்தது. சத்தியமாய் பூமியில் அவதரித்த இயேசு சத்தியத்தை நிறைவேற்றி, நித்தியத்தை நமக்குத் தந்திட தம்மையே சிலுவையில் அற்பணித்தார். அவரால் விடுதலை பெற்ற நாம் அவருக்காய் வாழ்ந்திடுவோம்: அவருக்குள் வாழ்ந்திடுவோம். அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்போமாக. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஜியோஃபி ஷம்மா ஏசுரெத்தினம்
- செல்வி. கிளாரிசா டேனியேல் மாணிக்கம்
- செல்வி. ஷாரோன் கிரேஸ் எபிநேசர்
- செல்வி. கிறிஸ்து ராணி ஆசீர்வாதம்
- செல்வி. ஜாக்குலின் பிரீத்தி ஜோசப்
- செல்வி. ஹெப்சிபா பியூலா தாமஸ்
- செல்வன். ஆலன் எஸ்ரா டேனியேல்
- செல்வன். ஜாண் அற்புதராஜ்
- செல்வன். பிரவீன் ஐசக்துரை
- செல்வன். அருண் பிரகாஷ் அல்போன்ஸ்
- சகோதரி. ராணி ராமமூர்த்தி
- சகோதரி. தேவகி செல்வதாஸ்
- சகோதரி. மெர்சி ஐவி சாமுவேல் ஜாண்சன்
- சகோதரி. எலிசபெத் ஈஸ்டர்ராஜ்
- சகோதரி. தேவகனி செல்வகுமார்
- சகோதரி. நீலாவதி ஆசீர்வாதம்
- சகோதரி. மெர்லின் ஜோன்ஸ்
- சகோதரி. சத்யா ஜீவா
- சகோதரி. ஜாய் ஷெகினா ஜாண்போஸ்கோ
- சகோதரி. பிரிஸ்சில்லா ஆமோஸ்
- சகோ. ஜேம்ஸ்
- சகோ. இம்மானுவேல் ஸ்டீபன்
- சகோ. ஜெயசேகர்
- சகோ. ராஜா செல்வன்
- சகோ. ஜாண்சன்
- சகோ. செபாஸ்டின் ஜோசப்
- சகோ. ஈஸ்டர்ராஜ்



# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. ஜோசப் ஜாண்
- திருமதி & திரு. சாம்சன் தேவானந்த்
- திருமதி & திரு. ஆஸ்டின் முத்தையா
- திருமதி & திரு. ஸ்ரீதர்



நான் உனக்காக வழக்காடி; உன் பழிக்குப்பழிவாங்கி; அதின் கடலை வறளவும் அதின் ஊற்றைச் சுவறவும்பண்ணுவேன். -எரே. 51:36

# பெப்ரவரி 2014 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 02-02-2014 | **சகோ. ஸ்டாலின்** | **சகோ. ஆசீர்வாதம்** |
| 09-02-2014 | **சகோ. கிறிஸ்டோபர்** | **சகோ. அற்புதராஜ்** |
| 16-02-2014 | **சகோ.ஜஸ்டின்சுந்தரராஜ்** | **சகோ. கிறிஸ்டோபர்** |
| 23-02-2014 | **சகோ. ஜசக்துரை** | **சகோ. விசு** |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 07-02-2014 | **சகோ. ஜசக்துரை** | **சகோ. பிரேம்குமார்** |
| 14-02-2014 | **சகோ. ஜெயசேகர்** | **சகோ. ஸ்டாலின்** |
| 21-02-2014 | **உபவாச திருவிருந்து ஆராதனை** | |
| 28-02-2014 | **குடும்ப ஆராதனை** | |

சங்கிலி தொடர் ஜெபம்: 06-02-2014 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 13-02-2014 இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை

அறுப்பின் பண்டிகை: 14-02-2014 மாலை 6 மணி முதல்

வாலிபர் கூடுகை: 28.2.2014. இடம், நேரம் பின்பு அறிவிக்கப்படும்

பெண்கள் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்

அவனுடைய சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றினான்: _எரே. 52:33

மறக்கமுடியுமா!

# மாம(பு)னிதர் அதோனிராம் ஜட்சன் (1788 – 1850)

பொருள், புகழ், பட்டம், பதவி, ஆடம்பரமான வாழ்க்கை வேண்டும். அத்துடன் நித்திய வாழ்வின் பேரின்ப மோட்சமும் வேண்டும். ஆனால் கிறிஸ்து இயேசு மட்டும் வேண்டாம். இதுதான் தற்காலத்தில் பெரும்பாலோரின் போக்கு. 19–ம் நூற்றாண்டு அமெரிக்கவாசியாகிய அதோனிராம் ஜட்சனின் இளமை எண்ணமும் இவ்வாறே இருந்தது. அதோனிராம் ஜட்சன் மல்தேனிலுள்ள மாசாசுசெட்ஸ் என்ற இடத்தில் 1788ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை ஜட்சன் ஒரு போதகர். அதோனிராம் பிரௌன் என்ற பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றபோது ஜேக்கப் ஈமாஸ் என்பவர் நண்பனாகக் கிடைத்தார். அந்த நண்பர் கடவுள் இல்லை என சாதிக்கக்கூடியவர் இருவரது ஆவலும் நகைச்சுவை, நாடகம், படிப்பு என பொதுவாயிருந்தபடியால் இருவரும் நண்பர்களானார்கள். தனது பட்டப்படிப்பை முடித்து வீட்டிற்கு வந்தபொழுது அதோனிராம் முழு நாஸ்திகனாக மாறியிருந்தார். தன் பெற்றோரிடம் கடவுள் இல்லையென வாதம் புரிந்தார்.

21 வயதை எட்டியிருந்த அதோனிராம் புதிய உலகைக் காண எண்ணி அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தை நோக்கிப் பயணமானார். அங்கு கண்டதெல்லாம் இவர் கண்ணுக்கு இதமாகவும் மனதிற்கு எழுச்சியூட்டுவதாகவும் இருந்தது. அங்குள்ள ஒரு நாடகக் கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தார். ஒரு வருடம் கழித்து செப்பீல்ட் என்ற இடத்தைச் சுற்றிப்பார்க்க தனது குதிரையின் மேல் பயணமானார். அங்கு ஒரு இளம் போதகரை சந்தித்துப் பேச வேண்டிய சூழ்நிலையில் அப்போதகரின் பேச்சு கடவுளையும் மெய் பக்தியைப் பற்றியும் அமைந்திருந்தது. அது ஜட்சனுக்கு அதிக எரிச்சலையும் சலிப்பையும் உண்டாக்கியது. அன்று இரவு தங்க ஒரு சத்திரத்திற்குச் சென்றார். சத்திரக்காப்பாளன் ஒரேயொரு அறைமாத்திரம் காலியாக இருப்பதாகவும் அந்த அறைக்குப் பக்கத்து அறையில் ஒரு நோயாளி மரண தருவாயில் இருப்பதால் அவன் இரவெல்லாம் சத்தமிடுவான் எனவும் கூறினான். ஜட்சனுக்கு மிகவும் களைப்பாய் இருந்ததால் எதுவானாலும் பரவாயில்லை என அந்த அறையை ஏற்றுக் கொண்டார். இரவெல்லாம் அவருக்கு தூக்கம் வரவில்லை. ஏனென்றால் பக்கத்து அறைக்கு மருத்துவர்கள் வந்துபோகும் சத்தமும் நோயாளியின் அலறல் சத்தமும் இவர் தூக்கத்தைக் கெடுத்தது. மரணத்திற்குப் பின் என்ன என்பதைப் பற்றிய எண்ண ஓட்டம் அந்த இரவில் ஜட்சனுக்கு அலைமோதியது. மரணமென்றால் என்ன? பக்கத்து அறையில் கத்திக் கொண்டிருந்தவனோ வாலிபன், அவன் இந்த மரணத்திற்குப் பிறகு அவன் எங்கு போவான்? போதகரான என் தந்தை சொல்வதுபோல நரகம் என்று ஒன்று உண்டா? இல்லை?. என் நண்பன் ஈமாஸ் சொல்வானே, நரகம் என்று ஒன்று இல்லவே இல்லை. ஒருவேளை அவன் இப்படிப்பட்ட மரண பயத்திற்கும் திகிலூட்டும் நினைவிற்கும் மிக ஞானமான பதிலை வைத்திருப்பான் என்று நினைத்துக்கொண்டார். அதிகாலை வேளையில் அவ்வறையிலிருந்து எந்த ஒரு சத்தமும் வரவில்லை. மறுநாள் காலை சத்திரக்காப்பாளனிடம் அந்த வாலிபனுக்கு என்ன நடந்தது என விசாரித்தார். உங்களது வயதையுடைய வாலிபனான அவன் பிரௌன் பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்தவன் என்று சத்திரக்காரன் சொல்ல: ஆர்வம் மிகுதியால் அதோனி ராம் அவரது முழுப்பெயரையும் விசாரிக்க நேற்று அவ்விதம் மரண ஓலமிட்டவனை

ஜாதிகளில் பெரியவளும்; சீமைகளில் நாயகியுமாயிருந்தவள் கப்பங்கட்டுகிறவளானாளே! –புல. 1:1

அறிந்து அதிர்ச்சியடைந்தார். அதோனிராமிற்கு உலகமே ஒரு நிமிடம் தலைகீழாகச் சுழன்றது. பக்கத்து அறையிலிருந்து அலறியது தன்னுடைய ஆருயிர் நண்பன் ஈமாஸ் என்பதையும் இப்போது அவன் இறந்துவிட்டான் என்பதையும் நம்ப இயலவில்லை. கடவுளே இல்லையென சாதித்து உலகத்தின் எல்லா கேள்விக்கும் பதிலையுடைய அவனது ஓலம் அவரை வாட்டி வதைத்தது. தன் வீட்டிற்கு வந்ததும் தான் ஏதாது ஒரு இறையியல் கல்லூரியில் இணைந்து படித்து சத்தியத்தை அறியவேண்டுமெனத் தீர்மானித்தார்.

வேதாகமக் கல்லூரியில் சேர்ந்த மூன்றாவது மாதம் 1808–ம் ஆண்டு டிசம்பரில் தன்னை முழுவதும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். இவரும் சாமுவேல் மில்ஸ் என்ற மற்றொரு மாணவனும் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து மிஷனெரிப் பணிக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். இதுவே அமெரிக்க வெளிநாட்டு ஊழியங்களுக்கு வித்தாக அமைந்தது. இந்த மாணவர்கள் வைக்கோல் போர் அருகில் தவறாமல் கூடி ஜெபித்து தங்களையும் மிஷனெரிகளாக அர்ப்பணித்துக் கொண்டனர். இதற்கிடையில் கிறிஸ்துவை அறியாத மக்களைக் குறித்த பாரத்தைக்கொண்ட நான்சிஹசில்டைனை 1812–ம் ஆண்டு அதோனிராம் மணந்தார். திருமணமான 13 நாளிலேயே அதோனிராமும் நான்சியும் மிஷனெரியாக இந்தியாவுக்குப் புறப்பட்டனர். அப்பொழுதிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியினர் இவரை இந்தியாவிற்குள் அனுமதிக்கவில்லை. தேவனுடைய சித்தத்தை அறிய முயற்சி செய்தார். இறுதியாக பர்மாவிலுள்ள ரங்கூன் போய்ச் சேர்ந்தனர்.

தங்களைப் பற்றியதான தேவனுடைய திட்டவட்ட நோக்கம் பர்மாவில் தேவனுடைய ஊழியம் செய்வதே எனக் கண்டுகொண்ட ஜட்சன் தம்பதியர் அங்கு தேவனுடைய வசனத்தை விதைக்க ஆரம்பித்தனர். அந்நாட்களில் பர்மாவில் ஒரு மிஷனெரிகூட இல்லை. எரிகிற வெயிலிலும், புழுதி நிறைந்த ரஸ்சன் நகரத்திலும், மனச்சோர்வை உண்டாக்கும் சேறு நிறைந்த தெருக்களிலும் ஊழியம் செய்தனர். புத்த மதத்தை அதிகமாகப் பின்பற்றிய பர்மீய மக்கள் மத்தியில் சாதி வேறுபாடு இல்லை. ஆனால் பர்மீய அரசன் வேறு மதம் அங்கு பரவுவதை அனுமதிக்கவில்லை. நித்திய கடவுளைக் குறித்த நம்பிக்கையே அவர்களுக்கு கிடையாது. இப்படிப்பட்ட கடினமான சூழ்நிலையில் பணிபுரிந்தார். அந்நாட்களில் பர்மாவில் கொடுங்கோலாட்சியில் ஆர்வம் கொண்ட ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவ்வரசனின் ஒவ்வொரு விருப்பமும் நாட்டின் சட்டமாக மாறியது. அரசரும் மக்களும் நாட்டின் மதம் புத்தமதம் எனக் கருதி வந்தனர். அம்மதத்தை ஏற்றுக் கொள்ளாத எவரும் குற்றம் புரிந்தவர்களாகக் கருதப்பட்டு மரண தண்டனைக்கு ஆளானார்கள். முதலில் பர்மீய மொழியை நுட்பமாகக் கற்றுக் கொள்ள தினமும் 14 மணி நேரம் செலவழித்தனர் ஜட்சன் தம்பதியினர். கையெந்திரத்தின் மூலம் அநேகப் பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டனர். ஒருநாள் இவரது கைப்பிரதியைப் படித்துவிட்டு ஒரு மனிதன் வீடுதேடி வந்து இயேசு கிறிஸ்துவை பற்றி தான் அறிந்து கொள்ள இன்னும் புத்தகங்கள் தேவையெனக் கேட்டான். உடனே மொழிபெயர்த்து முடித்திருந்த மத்தேயு 5–ம் அதிகாரத்தை அவனிடம் கொடுத்தார். இப்படியாக தாகமுள்ள ஆத்துமாக்களைத் தேவன் அங்கு எழுப்ப ஆரம்பித்தார்.

6 வருடங்கள் தினமும் 15 மணி நேரம் பாடுபட்டபிறகு முதலில் மாஸ்றென் என்பவர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து 18 பேர் ஞானஸ்நானம் எடுத்தனர். இதற்கிடையில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டார். இவரது குடும்ப வாழ்வில் முதல் குழந்தை இறந்தே பிறந்தது, இரண்டாவது குழந்தையும் எட்டாவது மாதத்தில் இறந்து போயிற்று. தேவனின் கிருபை இவர்களது கடின நேரத்தில் தாங்கினதால் ஊழியத்தில் முன்னேறிச் சென்றார். ஊருக்கு வெளியே இருந்த தங்களது மிஷன் பங்களா குறித்து திருப்தியில்லாத ஜட்சன் ஜனக்கூட்டம் மத்தியில் தங்களது வீடு அமைய வேண்டும் என்று வீட்டை மாற்றினார். மடம் போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி எல்லா மக்களுக்கும் திறந்த வாசலை உண்டாக்கினார். யாரும் இங்கு வந்து இளைப்பாறி போதகத்தைக் கேட்கலாம், விவாதிக்கலாம் என்று கூறி தனது பங்களாவை ஒரு பொது இடமாக அமைத்தார். அங்கு ஞாயிறுதோறும் இயேசுவின் அருளை நினைத்து மக்கள் புகழ்ந்து பாடித்துதித்தனர். ஆராதனை முடிந்தபின் முற்றத்திற்குச் சென்று பாய் ஒன்றில் அமர்ந்து மணிக்கணக்காக அதோனிராம் கிறிஸ்துவின் இரட்சிப்பை அறிவிப்பார்.

பிரிட்டிஷ் தேசத்திற்கும் பர்மாவிற்கும் யுத்தம் மூளவே மிஷனெரிமார்களெல்லாம் ஒற்றர்களாகக் கருதப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அதோனிராமும் 20 மாதங்கள், சில வாரங்கள் கழித்து விடுதலையடைந்தார். அவர் வீடு திரும்பியபோது இவரது மனைவி சுகவீனமாயிருந்தார். பிரிட்டிஷாருக்கும் பர்மியருக்கும் சமாதான மனப்பான்மையை நிலவச் செய்வதையும், கிறிஸ்தவ மதபோதனைக்கும் சுதந்திரம் அளிப்பதையும் கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு உதவியளிக்க ஜட்சன் வெளியூருக்கு அழைக்கப்பட்டார். ஜட்சன் திரும்புவதற்குள் இவரது மனைவி ஒருவித காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சையும் பயனில்லாமல் 1826–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் தேதி நான்சிஹாசல்டின் மரித்தார். 6 மாதத்திற்குப் பிறகு இவரது 3–வது குழந்தையும் மரித்துப்போனது. இதனால் அதிக மனச்சோர்வுக்குள்ளான ஜட்சன் மனநோயினால் சிலகாலம் அதிக கஷ்டப்பட்டார்.

உடன் ஊழியர்களின் அன்பினால் உடல் நலம் தேறினார். அதன்பின் முன்பைக் காட்டிலும் அதிக ஊக்கத்துடன் சிறந்த பணியாற்றினார். மனைவியின் மறைவிற்குப்பின் 24 ஆண்டுகள் 1850 வரை பர்மாவிலேயே பணியாற்றினார். 1834–ம் ஆண்டு வேதம் முழுவதையும் பர்மிய மொழியில் மொழிபெயர்த்து முடித்தார். இவர் நூற்றுக்கணக்கான ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். திடீரென்று இவர் சரீரத்தில் சயரோக நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. 62–ம் வயதில் 1850–ம் வருடம் சுகவீனத்தின் பேரில் கடல் யாத்திரை சென்றபோது நடுக்கடலில் மரணமடைந்து, கடலில் அடக்கம் பண்ணப்பட்டார். இவர் பர்மியர்களிடையேயும், கரேன்களிடையேயும் 63 தேவாலயங்களும், அநேகம் சபைகளும் உருவாக்கியிருந்தார். அன்று ஜட்சன் பர்மாவில் ஏற்றிய கிறிஸ்தவ தீபம் இன்றும் சுடர்விட்டு நிற்கின்றது.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. பால் பாண்டியராஜ்**



# பதில் சொல்லுங்க

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. மாயக்காரனின் நம்பிக்கை எதனுடைய வீடுபோல இருக்கும்?
2. சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்குவது எது?
3. எது எனக்குள் வாஞ்சையால் சோர்ந்து போகிறது?
4. ஆத்துமா எதை ஆரோசிப்பதாக யோபு கூறுகிறார்?
5. லிவியாதானை துரத்தாதது எது?
6. சகல ஜீவாத்துமாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாவரம் எது?
7. எது ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது?
8. அக்கிரமக்காரர்களுக்கு கிடைப்பது எது?
9. தீவனமிருக்குமிடத்தில் எது கதறாது?
10. எவைகளை அக்கினி பட்சிக்கும்?
11. திட்டத்தையும், வழியையும் எவைகளுக்கு ஏற்படுத்துகிறார்?
12. என் கண்ணிமைகளின் மேல் உண்டாயிருக்கிறது என்ன?
13. எந்த நாளுக்கென்று துன்மார்க்கன் கொண்டு வரப்படுகிறான்?
14. எங்கு கந்தகம் தெளிக்கப்படும்?
15. எது மண்ணிலிருந்து முளைக்கிறதுமில்லை?

குறிப்பு:- வேதாகமத்தில் யோபுவின் புத்தகத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 21-02-2014 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.



## ஜனவரி மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| Sis. பத்மினி வர்க்கீஸ் | Sis. டாஃப்னி ஜெபசிங் |
| Sis. லதா கிறிஸ்டோபர் | Sis. ஹேனா எசேக்கியேல் |
| Sis. பிரியா பிரேம்குமார் | Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம் |
| Sis. ஜெபா | Sis. சுகந்தி தம்புகுமார் |
| Sis. ஜோன் அசோக்குமார் | Sis. மரகதம் ஸ்டீபன் |
| Sis. சுபா ஸ்டீபன் | Sis. விக்டோரியா ராஜன் |
| Sis. சாந்தி | Sis. அனிதா தாஸ் |
| Bro. ஜாண்சன் | Bro. லாசர் |
| Bro. ஜாண் | Bro. இம்மானுவேல் |
| Bro. அருள்மணி | Bro. தர்மர் |

## இன்றைய தகவல்

# தேசியக் கொடி

தேசியக் கொடி ஏற்றும் போது அதில் பூக்கள் ஏன் வைக்கப்படுகிறது என்றால், நம் தேசியக் கொடி மேலே ஏறி பட்டொளி வீசி பறப்பதற்கு முன் அதில் வைக்கப்பட்டுள்ள மலர்கள் கீழே வந்து விழுவதைப் பார்த்து கை தட்டுகிறோம். ஆனால் அதற்குள் மிகப் பெரிய சோக சம்பவம் அடங்கி இருக்கிறது. அது என்னவென்றால், இந்த கொடி மேலே ஏற (அதாவது நாம் சுதந்திரம் பெற) எண்ணற்ற தாய்மார்களின் கூந்தலில் இருந்த மலர்கள் கீழே விழுந்திருக்கிறது: என்பதைத்தான் இந்த கொடி மேலே ஏறும் போது மலர்கள் கீழே விழுந்து அதனை நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

இனி ஒவ்வொரு முறையும் தேசியக் கொடியேற்றத்தைக் காணும்போதும் இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இன்று நாம் கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்து கொண்டு உலகை சுற்றி வருகிறோம். அன்று அந்த நல்ல உள்ளங்கள் தங்கள் கணவர்களை சுதந்திர போராட்டத்திற்கு அனுப்பாமல் இருந்திருந்தால் நாம் இன்னும் எங்கேயாவது செக்கு இழுத்துக் கொண்டுதான் இருந்திருப்போம் அல்லது அதைக்காட்டிலும் கீழ்த்தரமான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்போம் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

## சபையின் 2014-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"

யோவான். **8:32**

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

| | |
|---|---|
| Geona Shamy | Jainy |
| Lydia | Jessly |
| Sharon Keerthana | RAESHMA |
| Joseph Prince | ROSHAN |

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் - போன்: 50659288

நீ அவர்கள் வார்த்தைகளுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகத்துக்குக் கலங்காமலுமிரு: அவர்கள் கலகவீட்டார். -எசே. 2:6



## ஜனவரி மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

1. 52 நாட்களுக்குள் — நெகே. 6:15
2. நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும், எங்கள் சகல பொருள்களுக்காகவும், செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும். — எஸ்றா. 8:21
3. நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. — எஸ்த. 4:13.
4. வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக் குட்டியை. — நெகே. 9:18
5. பார்வைக்கு நன்றாயிருந்ததினால். — எஸ்த. 2:8–9
6. சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள். — நெகே. 1:3
7. மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம் பண்ணினதினால். — எஸ்றா. 10:10
8. இரண்டு முறை. — எஸ்த. 7:2
9. ஜனங்கள் எல்லோரும் எழுந்து நின்றார்கள். — நெகே. 8:5
10. பொன் தட்டுகள்... ... ... ஐயாயிரத்து நானூறு. — எஸ்றா. 1:8–11
11. சாலொமோன். — நெகே. 13:26
12. பொன்னால் செய்யப்பட்ட நானாவித பாத்திரங்களினால். — எஸ்த. 1:7
13. பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும். — நெகே. 3:1
14. ஆமானை மொர்தெகாய் வணங்கி நமஸ்கரிக்காததினால். — எஸ்த. 3:5
15. செஸ்பாத்சார். — எஸ்றா. 5:16

## நினைவு கூருங்கள்

**கடந்த நாட்களில் நம்மைவிட்டு பிரிந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்த அன்பு சகோ. ஃபிராங் வில்லியம் அவர்களின் குடும்ப ஆறுதலுக்காகவும் சமாதானத்திற்காகவும் உங்கள் ஜெபங்களில் மறக்காமல் நினைவு கூருங்கள்.**

**பேரீச்சம் பழம்**

## பழம் சாப்பிடுங்க

பாலை நன்கு கொதிக்க வைத்து பேரீச்சம் பழத்தை அதில் கலந்து தினமும் இளம் பெண்கள், ஆண்கள், வளரும் குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் சாப்பிட வேண்டும். இது சிறந்த மருத்துவ பலன்களைக் கொண்டது. இரும்புச் சத்து மற்றும் நார்ச்சத்து அடங்கியுள்ள பேரீச்சம் பழம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. உடலில் உள்ள ஹார்மோன்களின் நிலையை சரி செய்ய உதவுகின்றது. ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சிகள் கொண்ட பெண்கள் தினமும் பாலுடன் இரண்டு பேரீச்சம் பழத்தை போட்டு கொதிக்க வைத்து பாலுடன் தேன் கலந்து ஒவ்வொரு நாளும் சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் பிரச்சனை நீங்கும்.

**– அஹமதி தமிழ் திருச்சபை**

நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு; என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. –எசே. 3:17

# வாள் (வசனம்) வீச்சு

## எச்சரிக்கை

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்: அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்: உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். (மத். 7:15).

ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் (1திமோ. 4:1).

கள்ளத்தீர்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்: அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்: அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும் (2பேது. 2:1−2).

நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன் (அப். 20:29−30).

## கற்றுக் கொள்




விடா முயற்சியை கடல் அலைகளிடமும்
கடமை தவறாமையை கதிரவனிடமும்
உத்வேகத்தை காட்டாற்றிடமும்
புன் சிரிப்பை பூக்களிடமும்
சுறுசுறுப்பை எறும்புகளிடமும்
சேமிப்பை தேனீக்களிடமும்
பொறுமையை பூமியிடமும்
கருணையை கர்த்தராகிய
இயேசுவிடமும் கற்றுக்கொள்.

– கொம்மையன்

## சிரி.... சிந்தி

**வாகனம் ஓட்டும் பொழுது கை தொலைபேசியின் அழைப்பை ஏற்காதீர்கள்: எதிர் முனையில் அழைப்பது எமனாகக் கூட இருக்கலாமே!**

– அஹமதி தமிழ் திருச்சபை

அவர்கள் நியாயங்களின்படியே அவர்களை நியாயந்தீர்ப்பேன்: _எசே. 7:27



# உன்னை ஒன்று கேட்பேன்



ஒரு ஊரில்

ஒரு சிறு கிராமத்தில் மிகவும் குறும்பான இரண்டு சிறுவர்கள் இருந்தனர். இவர்கள் இருவருமே எதிரில் நிற்பவர் சற்று தங்கள் கண்களை மூடினால் அவரின் காதையே திருடிவிட்டு சென்று விடுவார்கள் என்று சொல்லும் அளவிற்கு திருட்டுக்கு பேர் போனவர்கள். அந்த கிராமத்தில் ஏதாவது பொருட்கள் காணாமல் போய்விட்டால் முதன் முதலில் இந்த இரு சிறுவர்களையும் தான் அழைத்து விசாரிப்பார்கள். அதில் உடன்பாடு ஏற்படவில்லையானால், அதன் பின்புதான் வேறு விசாரணைகளை கையாள்வார்கள். இது அந்த கிராமத்தின் வழக்கமாக மாறி இருந்தது. இவ்விரு சிறுவர்களின் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் இந்த சிறுவர்களின் தீய செயலால் மிகுந்த மனவேதனையும் அதிகமாகவே இருந்தது. பெற்றோர்கள் எவ்வளவோ முயன்றும் இந்த சிறுவர்களை திருட்டு செயலிலிருந்து விடுவிக்க முடியவில்லை. இதனால் இரு சிறுவர்களின் பெற்றோர்கள் செய்வதறியாது அக்கிராமத்தில் வெட்கப்பட்டு வேதனையோடு வாழ வேண்டிய அவலநிலை அதிகமானது. சில வேளைகளில் அந்த கிராமத்தையே காலி செய்துவிட்டு வேறு எங்காவது சென்று குடியேறவும் அந்த பெற்றோர்கள் எண்ணியிருந்த வேளையில், காலை கதிரவன் போல் ஒரு துறவி அக்கிராமத்தில் நுழைந்தார்.

பெற்றோர்கள் தங்கள் அவலநிலையை, சொல்லொண்ணா வேதனையை துறவியிடம் சென்று பகிர்ந்து கொண்டார்கள். சுமைதாங்கியில் தன் சுமைகளை சற்று இறக்கி வைத்த உணர்வும் அந்த பெற்றோருக்கு சிறிது ஏற்பட்டது. பெற்றோர்கள் தொடர்ந்து இச்சிறுவர்களை தீய பழக்கத்திலிருந்து மாற்றுவதற்கான நல்வழிமுறைகளையும் ஏற்படுத்திதர வேண்டும் என்று துறவியிடம் கெஞ்சினார்கள். எப்படிப்பட்ட கற்களை வீசினாலும் கடல் எல்லாவற்றையும் தன்னகத்தே வைத்து மறைத்துக் கொள்வதுபோல் எல்லாவற்றையும் நிதானமாய் உட்கொண்ட துறவி அச்சிறுவரில் ஒருவனை தனியாக தன்னிடம் அனுப்பி வைக்கும்படி சொன்னார்.

வெளிச்சம் வரும் பின்னே, விடிவெள்ளி வரும் முன்னே என்பது போல் அப்பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி அவர்களின் முகங்களில் வெளிப்பட்டது. மகிழ்ச்சி மறைவதற்குள் வீட்டிற்கு சென்று இருவரில் ஒருவனிடம் மென்மையாக பேசி அவனை துறவியிடம் அனுப்பி வைத்தனர். அவனும் இதுவரை தான் பார்த்த, பழகிய முகங்களில் வித்தியாசமான தோற்றமுடைய துறவியை அன்று மாலையில் கடந்து சென்று சந்தித்தான். துறவி தன்னை பார்க்க வந்த சிறுவனிடம் 5 நிமிடம் கண்களை மூடி அமர்ந்திருக்கச் சொன்னார். அவனும் கீழ்ப்படிந்தான். பின்னர் அந்த சிறுவனிடம் நான் ஒரு கேள்வி கேட்பேன்: நீ பதில் சொல்ல வேண்டும் என்றார். உண்மைக்கு மாறாய் பேசி பழக்கப்பட்ட சிறுவன் அதையே இன்றும் செய்துவிடலாம் என்ற உணர்வில் நல்லவன் போல் தலை அசைத்து சரி என்றான்.

துறவி மெதுவாக சிறுவனிடம், "கடவுள் எங்கே? சொல்! கடவுள் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார். கேட்ட உடனே ஒளியின் வேகத்தில் சிறுவன் அங்கிருந்து ஓடி மற்ற சிறுவனிடம் சென்று சேர்ந்தான். இவனுடைய முகத்தில் பரவியிருந்த பதற்றத்தைப் பார்த்து ஏன்? என்ன நடந்தது? எங்கிருந்து வருகிறாய்? என்ற கேள்விகளை மற்ற சிறுவன் தொடுத்தான். அதற்கு அவன் நாம் பெரிய ஆபத்தில் மாட்டிக் கொண்டோம். இப்பொழுது கடவுளை காணவில்லையாம்: அந்த துறவி என்னிடம் கடவுள் எங்கே! எங்கே! என்று கேட்டார். ஏற்கெனவே நம் ஊரில் ஏதாவது காணோம் என்றால் நம்மீது தானே பழி சொல்வார்கள் என்றான். இப்பொழுது இரு சிறுவர்களின் நெஞ்சும் பதபதைத்து மீளா துக்கத்தில் மூழ்கியது.

தேவனுக்கு பிரியமானவர்களே! இப்படி இடது கைக்கும் வலது கைக்கும் வித்தியாசம் தெரியாமல் பாவத்தில் விழுந்து வாழ்ந்து கொண்டிருப்போர் கோடி கோடியே. மாற்கு *16:15*–ல் **"அவர் (இயேசு) அவர்களை (நம்மை) நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"** என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறதே. அப்படியானால் நம்மால் முடிந்தவர்களுக்கு நம்மால் முடிந்தவரை சுவிசேஷத்தை நாம் அறிவிக்கவில்லையென்றால் நம்மீது பழி சுமருமோ!

**கர்த்தரின் கிருபையில்**

**அ.ஃபியா ஆ. தாஸ்**

கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டுப் புறப்பட்டு; கேருபீன்களின்மேல் நின்றது. –எசே. 10:18

# சபையின் 2014 புது வருட ஆராதனையில் சில நிகழ்வுகள்

